
# Word Of Christ

# கிறிஸ்துவின் வசனம்






ஆசிரியர்
சகோ. அர்ச்சுனன் M.A., A.Bs.,


★ அன்பான சிறுவர் சிறுமியருக்கு உங்கள் இதழின் ஆசிரியர் எழுதும் கடிதம்.

உங்கள் பெற்றோர் உங்களுக்கு செலவுக்குக் கொடுக்கும் பணத்தில் ஒரு ரிப்ளை கார்டு வாங்கி கீழ்க்கண்ட மனப்பாட வசன போட்டியில் கலந்து கொண்டு பயன்பெறுங்கள். இன்றே! இப்பொழுதே! செய்வீர்களா!

குறிப்பு: ஒவ்வொரு மாதமும் 5வசனங்கள் வெளியிடப்படும் அதை மனப்பாடம் செய்து அந்தந்த மாத இறுதி தேதியில் தேவ பார்வையில் உட்கார்ந்து ரிப்ளை கார்டில் பார்க்காமல் உங்கள் முழு முகவரியுடன் எழுதியனுப்பவும்.

இம்மாத மனப்பாட வசனங்கள்:

ஆதியாகமம் 1:1, 3:15, 6:6, 12:1, 49:10.



# கிறிஸ்துவின் வசனம்
# WORD OF CHRIST

மாம் 4 செப்டம்பர் 1995 கனி 2


## ஒரு கலசம் தண்ணீர்
### A Cup of Water

நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களாயிருக்கிறபடியினாலே என் நாமத்தினிமித்தம் உங்களுக்கு ஒரு கலசம் தண்ணீர் குடிக்கக் கொடுக்கிறவன் தன் பலனை அடையாமற் போவதில்லை என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று மாற் 9:41 ல் ஆண்டவர் சொல்லுவதை வாசிக்கின்றோம். ஆம் பிரியமான வர்களே! இவ்வுலகத்திலே ஜீவிக்கிற நாம், நம்மைப் போல சிருஷ்டிக்கப்பட்டு, நம்மைப் போல மாமிசமாகிய ஒரு சகோதரனுக் காவது ஒரு சகோதரிக்காவது நம்மை ஒழிக்காமலிருந்து ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் அவர்களுக்கு உதவி செய்யவேண்டும். நமது வயிறு நிறைந்தால் போதும் என்ற எண்ணத்தோடு இருக்கக் கூடாது. உதவி செய்து விட்டு பிரதி பலனை எதிர்பார்ப்பதும் கூடாது.

சமாரியன் ஒருவனைப் பற்றி நமதாண்டவர் லூக் 10:31-35ல் சொல்வதைப் பாருங்கள். ஒருவன் கள்ளர் கையில் அகப்பட்டான் அவர்கள் அவன் வஸ்திரங்களை உரித்துக் கொண்டு, அவனைக் காயப்படுத்தி குற்றுயிராக விட்டுப் போனார்கள். அப்பொழுது தற்செயலாய் ஒரு ஆசாரியன் அந்த வழியே வந்து, அவனைக் கண்டு பக்கமாய் விலகிப் போனான். அந்தப்படியே ஒரு லேவியனும் அந்த இடத்துக்கு வந்து, அவனைக் கண்டு, பக்கமாய் விலகிப் போனான். பின்பு ஒரு சமாரியன் ஒருவன் பிரயாணமாய் வருகையில் அவனைக் கண்டு மனதுருகி கிட்டவந்து, அவனுடைய காயங்களில் எண்ணெய்யும், திராட்ச ரசமும் வார்த்து, காயங்களைக் கட்டி, அவனை தன் சுயவாகனத்தின் மேல் ஏற்றி, சத்திரத்துக்குக் கொண்டு போய் அவனைப் பராமரித்தான். மறு நாளிலே தான் புறப்படும்போது இரண்டு பணத்தை எடுத்து, சத்திரத்தான் கையில் கொடுத்து, நீ இவனை விசாரித்துக் கொள், அதிகமாய் ஏதாகிலும் இவனுக்காகச் செலவழித்தால், நான

திரும்பி வரும்போது அதை உனக்குத் தருவேன் என்றார். யாரென்றே தெரியாத ஒரு நபரை கர்த்தருடைய நாமத்தினிமித்தம் இந்த சமாரியன் எப்படி பராமரித்தான் பார்த்தீர்களா? எவ்வளவோ வேலைகள் இருந்திருக்கும் இந்த சமாரியனுக்கு.

அதையெல்லாம் பொருட்படுத்தாது தன்சுய வாகனத்தில் ஏற்றிக்கொண்டு போய் பராமரித்தான். மேலும் அவனுக்காகும் செலவுகளையெல்லாம் திரும்ப வரும்போது தருவதாகக் கூறினான் நமது மனதுருக்கம் எங்கே? நண்பரே! சிந்திப்பீர். வீட்டின் மேல் வீட்டைக் கட்டுகிறோம், நிலத்தோடே நிலங்களைச் சேர்க்கிறோம் வாகனத்திற்கு மேல் வாகனங்களை வாங்குகிறோம். இயேசுவின் நாமத்தினிமித்தம் எத்தனை பேர்களுக்கு உதவி செய்தோம்? ஊரெல்லாம் அலைந்துதிரிந்து களைப்புடன் வரும் கிறிஸ்துவின் ஊழியரைக் கண்டால் கதவடைக்கும் கூட்டம் ஒருபுறம் இருந்து கொண்டுதான் இருக்கிறது. இந்த உலகத்தில் உங்களுக்குக் கொடுக்கப் பட்ட ஆயுசு நாட்களுக்குள் நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள் என்று நிதானித்துப் பாருங்கள். கிறிஸ்துவின் வசனத்தை நிறைவேற்றப்போகிறீர்களா அல்லது உங்களுக்காகப் அதிகப் பொருள் சம்பாதிக்கப் போகிறீர்களா?

பொருளாசையைக் குறித்து எச்சரிக்கையாயிருங்களென்று லூக் 12:15-21 முடிய வாசிக்கும் போது ஒரு உவமையைச் சொல்லுகிறார். ஐசுவரியமுள்ள ஒருவனுடைய நிலம் நன்றாய் விளைந்தது. அவன் நான் என்ன செய்வேன்! என் தானியங்களைச் சேர்த்து வைக்கிறதற்கு இடமில்லையே; நான் ஒன்று செய்வேன், என் களஞ்சியங்களை இடித்துப் பெரிதாகக்கட்டி எனக்கு விளைந்த தானியத்தையும், என் பொருட்களையும் அங்கே சேர்த்து வைத்து பின்பு: ஆத்துமாவே, உனக்காக அநேக வருஷங்களுக்கு அநேகம் பொருட்கள் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது நீ இளைப்பாறி, புசித்து குடித்து பூரிப்பாயிரு என்று என் ஆத்துமாவோடே சொல்லுவேன் என்று தனக்குள்ளே சிந்தித்துச் சொல்லிக் கொண்டான். தேவனோ அவனை நோக்கி மதிகேடனே, உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக் கொள்ளப்படும் அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருடையதாகும் என்றார். பிரிய நண்பரே! தேவனிடத்தில் ஐசுவரியவானாயிராமல் தனக்காகவே பொக்கிஷங் களைச் சேர்த்து வைக்கிறவன் இப்படியே இருக்கிறான். ஆகவே தனக்கானவைகளையல்ல பிறனுக்கானவைகளையே நோக்கு வோமாக!

நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்துவும், இவர்களுக்கு எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள் என்று கூறுகிறார். ஆகையால் ஆண்டவரின் நாமத்தினிமித்தம் நாம் மற்றவர்களுக்கு உதவி செய்வதில் சோர்ந்து போகாதிருப்போம். அப்பொழுது தேவனிடத்தில் அதற்குரிய பலனை பெற்றுக்கொள்வோம். கர்த்தர் உங்களைப் பெலப்படுத்துவாராக!.

★ சபைச் செய்திகள்:

1. 20 8-95 ல் வத்தலக்குண்டு கிறிஸ்துவின சபையார் கூடுமிடத்தில் சகோதர சகோதரிகளுக்கான ஆவிக்குரிய ஐக்கியக் கூட்டம் இனிதே நடைபெற்றது.

2. 30-8-95 ல் மேற்கண்ட இடத்தில் நற்செய்திக் கூட்டமும் நடைபெற்றது. அநேகர் கலந்து கொண்டு தேவ செய்தியைக் கேட்டனர் ஆரம்ப ஜெபத்தை சகோ. பன்னீர்தாஸ், மதுரை அவர்கள் துவக்கி, தேவசெய்தியை சகோ. ஜேம்ஸ் ஐசக், சாயாபுரம் அவர்கள் அளித்து நற்செய்திக் கூட்டத்தைச் சிறப்பித்தனர்.

3. பாண்டிச்சேரி கிறிஸ்துவின் சபையில் அங்கமாக இருக்கும் சகோ. மூர்த்தி என்ற மணமகனுக்கு கிறிஸ்துவுக்குள்ளான மணமகள் தேவை. கடிதத்தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி.

Bro. S. SENGOLRAYAN,
PREACHER
CHURCH OF CHRIST,
11, ANITA NAGAR,
2nd CROSS STREET,
OLUANDAI KEERAPALAYAM,
PANDICHERRY-605004

★ ஒரு வாசகரின் கடிதம்:

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரர் அவர்களுக்கு, கிறிஸ்துவின் வசனம் நான் மாதந்தோறும் பெற்று வருகிறேன். மிக்க நன்றி. அதில் வருகின்ற செய்தி, வேத அறிவுப் போட்டி இவைகளைப் பார்க்கும் போது என்னை அறியாமலேயே ஓர் உள்ளுணர்வு வெளிப்படுகிறது. தேவனுக்கு ஸ்தோத்திரம். மேலும் தங்களுடைய பத்திரிக்கை மூலம் நான் பழைய வாழ்க்கையிலிருந்து புதிய வாழ்வை அடைந்துள்ளேன். அதற்காக கர்த்தருக்கு ஸ்தோத்திரம் சென்ற மாதம் வெளிவந்த பத்திரிக்கையில்.

"நீ எங்கே இருக்கிறாய்?"

என்ற செய்தியைப் படிக்கப் படிக்க தன்னையே நீ எங்கே இருக்கிறாய் என்ற கேள்வி துளிர்க்கிறது. ஆதாமும் ஏவாளும் போல இல்லாமல் சொல்லும் அடியேன் கேட்கிறேன் என்ற சாமுவேல தீர்க்கதரிசியைப் போல வாழ நாம் ஒவ்வொருவரும் ஜெபிப்போமாக.

எனது அப்பா 16-8-95 ல் மரித்துவிட்டார். குடும்ப ஆறுதலுக்காகவும், சமாதானத்திற்காகவும் ஜெபியுங்கள்.

இவண்
K. கனகராஜ்
நாமக்கல

★ ஆகஸ்டு மாத வேத அறிவுப்போட்டியில் வெற்றி பெற்றவர்கள்

1. சகோ. ஜெயக்குமார் — காங்கேயம
2. சகோதரி மேரி எலிசபெத் கலைவாணி — வத்தலகுண்டு
3. சகோதரி ஸ்டெல்லா இவாஞ்சலின் — ,,
4. சகோதரி ஜெய அமுதா — ,,

★ சிறுவர்கள்:

1. ஜெயபிரவிந்த் — வத்தலக்குண்டு
2. அமுதபாண்டி — ,,
3. கோபி — ,,
4. ரமேஷ் — கோவை
5. ஆபேல் — காங்கேயம
6. பச்சைக்கண்ணன் — காளையார்குறிச்சி
7. ஜான்வெஸ்லி — ,,

★ ஆகஸ்டு மாத இதழின் விடைகள்

1. பனையைப் போல், லீபனோனிலுல்ல கேதுருவைப் போல் சங் 92:12
2. அகரிப்பா அப் 26:28
3. எஸ்கோல் எண் 13:23
4. ஐந்து யோவா 5:2
5. தேவனுக்கு அல்ல, பேய்களுக்கே 1 கொரி 10:20
6. மோசே
7. சபிக்கப்பட்டவன்
8. ஒலிவமலை
9. இச்சை
10. காத்தருடைய சந்நிதிக்கு

★ சிறுவர் விடைகள்:

1. கற்பனைகளின்படி நடிப்பதே 11 யோவா 6
2. மீறி நடக்கிற 11 யோவா 9
3. வாழ்த்துதல் 11 யோவா 10
4. சத்தியத்தாலும் 111 யோவா 12
5. சமாதானம் 111 யோவா 14

★ இம்மாத வேத அறிவுப்போட்டி

1. குற்றத்தை மூடுகிறவன் எதை நாடுகிறான்?
2. கர்த்தர் எதை முக்கியப்படுத்தி அதை மகிமையுள்ளதாக்குவார்?
3. இவர்கள் பேசாமலிருந்தால் கல்லுகளே கூப்பிடும் என்று ஆண்டவர் சொன்னார்?
4. அலெக்சந்திரியா பட்டணத்தில் பிறந்தவனும் வேதாகமங்களில் வல்லவனுமாயிருந்தவன் யார்?
5. இந்தச்சிறியரில் ஒருவனாகிலும் கெட்டுபோவது யாரின்சித்தமல்ல?
6. வெள்ளாட்டுக் குட்டி……… இறைச்சியை ஒரு கூடையிலே வைத்து………… கர்த்தருடைய தூதனிடத்தில் கொண்டு வந்து வைத்தவன் யார்?
7. பவுலைப் பற்றிக் கொண்டு விசுவாசியான மார்ஸ் மேடையின் நியாயாதிபதி யார்?
8. ஆண்டவர் உயிர்த்தெழுந்த பின்பு சாப்பிட்டாரா?
9 எந்த பலியும் உப்பினால் உப்பிடப்படுவது போல எந்த மனுஷனும் எதினால் உப்பிடப்படுவான்?
10 இம்மூவராலே பூமியெங்கும் ஜனங்கள் பரப்பினார்கள் அவர்கள் யார்?

★ சிறுவர் போட்டி:

(வெளிப்படுத்தின விசேஷத்திலிருந்து நிரப்புக.)

1. ……சூனியக்காரும், ……… பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் என்றார்.
2. உலகமனைத்தையும் மோசம் போக்குகிற ……… என்றும் ……… என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் தள்ளப்பட்டது.
3. இப்படி நீ ………… வெதுவெதுப்பாயிருக்கிற படியினால் உன்னை என் வாயினின்று வாந்தி பண்ணிப் போடுவேன்.
4. ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு தேவனுடைய மத்தியிலிருக்கிற ஜீவவிரிட்சத்தின் கனியைப் புசிக்கக் கொடுப்பேன் என்றெழுது.
5, இந்தத்தீர்க்கதரிசனவசனங்களை இதில் எழுதியிருக்கிறவைகளைக் பாக்கியவான்கள், காலம் சமீபமாயிருக்கிறது.

MONTHLY MAGAZINE News Paper
WOR OF CHRIST: Regd. No. 84661-92
Registerd No TN/DDL/19

எங்களோடு சேர்ந்து தேவனை
ஆராதிக்க அன்புடன் அழைக்கிறோம்

ஞாயிறு காலை 9-00
புதன் மாலை 6-30

கிறிஸ்துவின் சபை
கணவாய்ப்பட்டி ரோடு
வத்தலக்குண்டு-624202.

இவ்விதழ் உங்களுக்கு இலவசமாக
அனுப்பப்படுகிறது.

PRINTED MATTER

To

If undelivered please return to:

**THE EDITOR**
WORD OF CHRIST
Post Office Box No. 5.
**Batlagundu624202**
S. India

Edited and publised by B. Arjunan M.A., A.Bs , on behalf of church of Christ 2.2.63A/22 Kanavaipatti Road BTL
Printed by C. Pandiyarajan B.Sc., SHANTHI PRINTING PRESS Main Road Batlagundu-624202.